


**11. 11. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

2. கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. புலனாய்வு முகமைகள் துரிதகதியில் குண்டுவெடிப்பு சம்பவத்தை விசாரித்து வருவதால் உண்மை விவரங்கள் விரைவில் பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் மகளிர் பாதுகாப்பிற்காக 12 கோடி ரூபாய் செலவில் 80 ரோந்து வாகனங்களின் சேவையை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

5. Kumamoto Masters பேட்மிண்டன் போட்டிகள் ஜப்பானில் இன்று தொடங்கின.

## இனி விரிவான செய்திகள்

************

### அமித்ஷா

டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தலைமையில் புதுதில்லியில் உயர்மட்ட பாதுகாப்பு சார்ந்த ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது.

திரு.அமித்ஷாவின் இல்லத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மத்திய உள்துறை செயலர், புலனாய்வு முகமையின் இயக்குனர், டெல்லி காவல்துறை ஆணையர் தேசிய புலனாய்வு முகமையின் தலைமை இயக்குனர்,
ஜம்மு காஷ்மீர் காவல்துறை தலைமை இயக்குனர் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

கார் வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து நிலவும் சூழல் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதனிடையே அனைத்து முக்கிய இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு கண்காணிப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

புலனாய்வு முகமைகளும் காவல்துறையினரும் தடயவியல் நிபுணர்களும் துரிதகதியில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் கார்வெடிப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே செங்கோட்டை மெட்ரோ நிலையம் அருகே மெதுவாக வந்துகொண்டிருந்த வாகனம் சிக்னலில் நின்ற போது இந்த குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்றதாக டெல்லி காவல்துறை ஆணையர் திரு.சதீஸ் கோல்ச்சா தெரிவித்தார்.

சட்ட விரோத தடுப்பு மற்றும் வெடிகுண்டு தடுப்பு, சட்டங்கள், மற்றும் பாரதிய நியாய சன்ஹிதா குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தொடர்ந்து உள்துறை அமைச்சருடன் இந்த சம்பவம் குறித்து கேட்டறிந்து வருகிறார்.

கார் குண்டுவெடிப்பில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருபவர்களை திரு.அமித்ஷா சந்தித்து பேசினார்.

காயமடைந்து மருத்துவமனைக்கு 15 பேர் கொண்டு செல்லப்பட்டதில் 8 பேர் வழியிலேயே உயிரிழந்ததாகவும்,

3 பேர் பலத்த காயமடைந்திருப்பதாகவும், மருத்துவமனை கண்காணிப்பு மருத்துவர் தெரிவித்தார்.

இதனிடையே பாதுகாப்பு காரணங்களுக்காக டெல்லி lalqila மெட்ரோ ரயில் நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளது,

செங்கோட்டையும் அடுத்த 3 நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

************

**பிரதமர்**

டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்கள் நீதிக்கு முன்பு நிறுத்தப்படுவார்கள் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பூடான் தலைநகர் திம்ப்பு நகரில் இன்று உரையாற்றிய அவர், இந்த சம்பவம் தொடர்பாக தாம் புலனாய்வு முகமையுடன் தொடர்ந்து பேசி வருவதாகவும், இந்த சதி திட்டத்தில் ஈடுபட்டவர்களை புலனாய்வு முகமைகள் கண்டறியும் என்றும் குறிப்பிட்டார்.

டெல்லி சம்பவத்தை தொடர்ந்து தாம் கனத்த இதயத்துடன் பூடான் வந்திருப்பதாகவும், நாட்டு மக்களை இச்சம்பவம் கடுமையாக பாதித்திருப்பதாகவும் கூறினார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தோர் குடும்பங்களின் வேதனையை தாம் உணர்ந்திருப்பதாகவும் ஒட்டுமொத்த தேசமும் அவர்களுடன் துணை நிற்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

உலக அமைதிக்கான முக்கிய தினமாகும் இது என்று கூறிய அவர், இந்தியா – பூடான் இடையேயான நட்புறவு மிகவும் ஆழமானது கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெரிவித்தார்.

பூடான் பிரதமர் ஷெரிங் டாப்கேயையும் பிரதமர் சந்தித்து இருதரப்பு உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்தியா பூடான் நாடுகள் இணைந்து உருவாக்கிய நீர்மின் நிலைய திட்டத்தையும் பிரதமர் துவக்கிவைக்கிறார்.

************

**ராஜ்நாத்சிங்**

டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எக்காரணம் கொண்டும் தப்ப முடியாது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு சார்ந்த பேச்சுவார்த்தைகளில் இன்று உரையாற்றிய அவர், இச்சம்பவத்திற்கு காரணமானவர்கள் சட்டத்திற்கு முன்பு நிறுத்தப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்.

புலனாய்வு முகமைகள் துரிதகதியில் இச்சம்பவத்தை விசாரித்து வருவதகாவும், இதுகுறித்த உண்மை விவரங்கள் விரைவில் பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என்றும் கூறினார்.

டெல்லி சம்பவத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் அமைச்சர் தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு.ராஜ்நாத்சிங் ராணுவ பாதுகாப்பு தொடர்பான பன்முக சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள், நிலைப்பாடுகளை விவாதிப்பதற்கான தளமாக இப்பேச்சுவார்த்தைகள் உருவெடுத்திருப்பதாக குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் புதுமையான நவீன தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

திறன் மேம்பாடு, புதிய யோசனைகள், இளையோர் படைகள், எழுச்சிமிகு ஸ்டார்ட்அப் சூழல் போன்றவை இந்தியாவின் வலிமையாக திகழ்கிறது என்று கூறிய அமைச்சர் புதிய தொழில்நுட்ப செயல்பாட்டிற்கு உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

************

**தமிழ்நாடு - பாதுகாப்பு**

டெல்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் எதிரொலியாக சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு தற்போது போடப்பட்டுள்ளது.

விமான பயணிகளுக்கு வழக்கமான சோதனைகளுடன் கூடுதல் சோதனை நடத்தப்படுவதால் சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான பயணிகள் முன்னதாகவே விமான நிலையத்திற்கு வர அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த பாதுகாப்பு சோதனைகள் நடத்தப்படுவதாகவும், பயணிகள் அச்சமின்றி பயணிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் கோவில் உள்ளிட்ட பல்வேறு வழிபாட்டு தலங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குலசேகரபட்டினம் இஸ்ரோ வளாகம், உடன்குடி அனல்மின் நிலையம், பழைய காயல் செர்கோனியம் வளாகம் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் வாகனங்கள் தீவிர சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்படுகின்றன.

தமிழகம், கேரளம் கர்நாடக மாநிலங்களின் எல்லையில் அமைந்துள்ள நீலகிரி கன்னியாகுமரி மாவட்டங்களிலும் கண்காணிப்பு பணிகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளன.

ராமநாதபுரம் மாவட்ட கடலோர பகுதிகள் ராமேஸ்வரம், ஏற்வாடி தர்கா, பரமக்குடி உள்ளிட்ட பகுதிகளில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஆயுதம் ஏந்திய காவல் துறையினர் மோப்பநாய் உதவியுடன் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் தீவிர வாகன சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் காவல்துறை சார்பில் மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மாநகரங்களில் 12 கோடி ரூபாய் செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் விருதுநகர் மாவட்டத்தில் 62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தையும் திறந்துவைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை செங்கல்பட்டு கன்னியாகுமரி தர்மபுரி மாவட்டங்களை சேர்ந்த 6 திருக்கோவில்களில் புதிதாக கட்டப்பட்ட அர்ச்சகர் பணியாளர் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை 47 பேருக்கு வழங்கினார்.

அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலை வரைதொழில் அலுவலர், உள்ளிட்ட பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 120 பேருக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் 525 கலைஞர்களுக்கு 85 லட்ச ரூபாய்க்கான நிதி உதவியையும் முதலமைச்சர் வழங்கினார்.

************

**நிர்மலா சீதாராமன்**

மத்திய அரசின் திட்டங்கள் குறித்து திமுக தவறான தகவல்களை பரப்பி வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோயம்புத்தூரில் பிஜேபி தொண்டர்களிடையே இன்று உரையாற்றிய அவர், மத்திய அரசின் நலத்திட்டங்களை அடித்தள மக்களிடமும் கொண்டு செல்லும் பொறுப்பை கட்சி தொண்டர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

தேசியவாதமும், ஆன்மிகமும், பிஜேபியின் இரு கண்கள் என்றும், அதன் அடிப்படையிலேயே தேசத்தை ஆள்வதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள அனைத்து பிரிவு மக்களுக்கும் பயனளிக்கும் திட்டங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி செயல்படுத்தி வருவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

**வாய்ஸ்**

************

**முருகன்**

மவுலானா அபுல் கலாம் ஆசாத்தின் 137**வது** பிறந்ததினம் தேசிய கல்வி தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

தேசத்தின் கல்வி திட்டங்கள் மற்றும் எதிர்கால சந்ததியினரின் ஆளுமைக்கான அவரது தொலைநோக்கு அறிவாற்றலும் புதுமையான சிந்தனைகளும் என்றென்றைக்கும் உத்வேகமாக திகழும் என்று மத்திய அமைச்சர் டாக்டர்.எல்.முருகன் தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

************

**அன்பில்:**

தமிழ்நாட்டில் பகுதி நேர ஆசிரியர்களின் பணிநிரந்தரம் குறித்து விரைவில் நல்ல முடிவு எட்டப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எந்தெந்த வகைகளில் இவர்களை பணிநிரந்தரம் செய்யலாம் என்பது குறித்து விரைவில் தீர்வு காணப்படும் என்றார்.

- **வாய்ஸ்** - -

************

**பீஹார் தேர்தல்**

பீஹார் மாநிலத்தில் 2ஆவது இறுதி கட்டமாக 20 மாவட்டங்களில் உள்ள 122 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு தற்போது அமைதியாக நடைபெற்று வருகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி **47.62** சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெறும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக 7 தொகுதிகளில் மட்டும் வாக்குப்பதிவு மாலை 5 மணியுடன் நிறைவுபெறும்.

இந்த தேர்தலுடன், ஜம்முகாஷ்மீர், ராஜஸ்தான், ஜார்கண்ட், தெலங்கானா, பஞ்சாப், மிசோரம், ஒடிஷா மாநிலங்களின் 8 சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் இன்று நடைபெறுகிறது.

இத்தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் வரும் 14-ம் தேதி எண்ணப்படுகின்றன.

************

**சிலிண்டர்**

அரியலூர் மாவட்டம் வாரணவாசி அருகே இன்று சிலிண்டர் ஏற்றிவந்த லாரி வளைவுஒன்றில் திரும்பும்போது ஏற்பட்ட உராய்வு காரணமாக சிலிண்டர்கள் வெடித்து சிதறின.

இந்த சம்பவத்தில் லாரி முற்றிலும் எரிந்து சேதமடைந்தது.

அரியலூர் தீயணைப்புத்துறையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டதோடு, சிலிண்டர் வெடித்து சிதறுவதை தடுக்கும் பணியை மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த லாரி ஓட்டுநர் அரியலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

**பேட்மிண்டன்**

Kumamoto Masters பேட்மிண்டன் போட்டிகள் ஜப்பானில் இன்று தொடங்கின.

இந்தியாவின் லக்ஷயா சென், H.S. பிரணாய், தருண் மன்னேபள்ளி, ஆயுஷ் ஷெட்டி உள்ளிட்டோர் இதில் களமிறங்குகின்றனர்.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**